**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII code of Criminal Procedure)**

**In the Court of XI Additional Special Judge for CBI Cases**

**(CBI Cases Relating to Banks and Financial Institutions)**

**Chennai - 600 001.**

| | |
|---|---|
| Calendar Case | : C.C.No.46 /2015 |
| Deposition of witness for | : PW- 10 (LW- 20 ) |
| Name of the witness | : M.சதிஷ் குமார் த/பெ.முருகன் |
| Age | : 49 |
| Occupation | : லாரி உரிமையாளர் |
| Address | : எண்.1 ஓத்தவாடை தெரு,<br>மாதிரவேடு, வேலப்பஞ்சாவடி, சென்னை. |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 1st day of August 2025.

-----------------------------------------------------------------------------------------------

**(A1, A2, A6 are present. A3, A5 charge abated. A4 is absent. Petition filed and allowed).**

**Chief Examination :**

நான் லாரி உரிமையாளராக வியாபாரம் செய்து வருகிறேன். என்னுடைய நிறுவனத்தின் பெயர் M/s ஜெயமுருகன். 2011ல் அதை ஆரம்பித்தேன். என்னிடம் காட்டப்படும் அ.த.சா.8 ல் உள்ள ஜெயமுருகன் டிரான்ஸ்போர்டின் குட்ஸ் ரசீது எண்.006 தேதி 26.06.2014 என்னுடைய நிறுவனத்தின் பெயரில் உள்ளது. 2ம் எதிரி திரு.வெங்கட்ராமன் என்னிடம் போன் மூலமாக தொடர்பு கொண்டு, அயனாவரத்தில் உள்ள தனது வீட்டிற்கு வருமாறும், எதிர்காலத்தில் நிறைய வியாபாரம் செய்வதற்கு உதவி செய்வதாகவும் சொன்னார்.

நான் நேரில் அவரது வீட்டிற்கு சென்றேன். அப்போது ஆடிட் நோக்கத்திற்காக ஒரு பில் வேண்டுமென்று கேட்டார். என்னிடம் காட்டப்படும் அந்த பில்லை (லாரியில் பொருட்களை ஏற்றி செல்வதற்காக வழங்கப்படும் ரசீது) நான் வழங்கினேன். அந்த பில் பூர்த்தி செயப்படாமல் என்னால் கொடுக்கப்பட்டது. ஆனால் அந்த பில்லில் சொன்னது போல் எவ்வித பொருளும் எனது லாரி மூலமாக டிரான்ஸ்போர்ட் செய்யவில்லை. என்னிடம் காட்டப்படும் அந்த பில்லில் எழுதப்பட்டுள்ள விபரங்கள் திரு.வெங்கட்ராமன் அவர்களால் எழுதப்பட்டுள்ளது. அதில் சதிஷ்குமார் என்று எனது பெயரில் கையெழுத்து உள்ளது. அதை நான் போடவில்லை. (திரு.வெங்கட்ராமன் எதிரியை சாட்சி அடையாளம் காட்டினார்.) திரு.வெங்கட்ராமன் எனக்கு காசோலை ஒன்று கொடுத்தார். அது ரூ.48,750/-மதிப்பில் வழங்கினார். நான் எனது வங்கி கணக்கில் செலுத்தி பணமாக்கி ரூ.2,000/- எனக்கு கொடுத்ததுபோக மீதியை திரு.வெங்கட்ராமன் பெற்றுக்கொண்டார். திரு.வெங்கட்ராமனை ஒருமுறை மட்டுமே பார்த்தேன். அதன்பிறகு அவரை பார்க்கவில்லை. அதுபோல் Exim Focus என்ற கம்பெனிக்காக எவ்வித ஏற்றுமதியும் லாரி மூலம் செய்யவில்லை. இது சம்பந்தமாக சிபிஐ என்னை விசாரித்தனர்.

**<u>2 ம் எதிரி தரப்பில் குறுக்க விசாரணை</u>:**

என் லாரி மூலமாக ஏற்றுமதி செய்வதற்கு எனது தரப்பில் ரெசிப்ட் பில் கொடுப்பேன். அந்த பில்லில் இறக்குமதி செய்தபிறகு

பெற்றுக்கொண்டதற்கு கையெழுத்து செய்வார்கள். இறக்குமதி செய்த பிறகு அந்த பில்லை ஏற்றுமதி செய்த நபரிடம் கொடுப்போம். ஏற்றுமதி வரவு செலவு சம்பந்தமாக உரிய பதிவேட்டில் எழுதி வந்தேன். வருமான வரி தாக்கல் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்பட்ட பில், பில் புத்தகத்தில் இருந்தது. 50 பில்கள் ஒரு புத்தகத்தில் இருக்கும். பில்கள் வழங்கும்போது அசலை கிழித்துகொடுத்துவிட்டு கார்பன் நகலை புத்தகத்தில் வைத்துகொள்வேன். எனது போலிஸ் விசாரணையில் 2013 லிருந்து லாரி பிசினஸில் இருப்பதாக சொல்லியுள்ளேன். ஆனால் முதல் விசாரணையில் 2011 என கூறியுள்ளேன். போலிசார் பில் புத்தகத்தை சரி பார்க்க வேண்டுமென்று என்னிடம் கேட்டு பெறவில்லை. போலிசார் நான் முதல் விசாரணையில் சொன்ன காசோலையில் கண்ட பணத்தை வங்கி மூலம் பெற்றதற்குரிய பதிவு விபரத்தை காட்டக்கூடிய வங்கி கணக்கு அறிக்கையை கேட்டு பெறவில்லை. இதற்கு முன் நான் நிறுவனம் தொடங்கிய காலத்திலிருந்து மோசடியான பில்களை கொடுத்ததில்லை. என் மீது எவ்வித போலிஸ் வழக்கும் நிலுவையில் இல்லை. எனது நிறுவனத்திற்கு நல்ல பெயர் உள்ளது. இரண்டு ஈச்சர் லாரி, இரண்டு டாடா ஏஸி மற்றும் ஒரு கார் வைத்துள்ளேன். எனது ஐ.டி ரிட்டனில் மேலே சொன்ன காசோலை ரூபாயை காட்டவில்லை. நான் நல்ல பெயருடன் தொழில் செய்து வருவதால் ரூ.2000/-த்திற்கு ஆசைபட்டு மேற்கண்ட பில்லை

கொடுத்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியில்லை. போலிசார் பொருளை ஒப்படைப்பு செய்ததற்குரிய ஆவணங்களை எதையும் கேட்டு என்னிடம் பெறவில்லை. போலிசார் என்னிடம் மாதிரி கையொப்பம் எதுவும் பெறவில்லை. சிபிஐ என்னை விசாரித்தபோது கீழ்கண்டவாறு சொல்லியுள்ளேன்:

**"I gave Shri S.J. Srinivasan blank Transport Loading receipt No.006. Shri. S.J. Srinivasan only wrote the date, description of contents, Consignees name and Delivery address, amount on the Transport Loading receipt in front of me in our office."**

எனது முதல் விசாரணையில் 2 ம் எதிரி திரு.வெங்கட்ராமன் நான் கொடுத்த லாரி ரசீதை பூர்த்தி செய்துக்கொண்டதாகவும், சிபிஐ விசாரணையில் சீனிவாசன் என்பவர் பூர்த்தி செய்ததாகவும் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. திரு. வெங்கட்ராமன் வீட்டில் அப்போது சீனிவாசன் இருந்தார் அவர், திரு. வெங்கட்ராமனின் பணியாளர் ஆவார். 10 வருடத்திற்கு மேல் ஆகிவிட்டதால் வெங்கட்ராமனின் பணியாளரின் பெயர் ஞாபகத்திற்கு இல்லை. நான் உண்மையாக சரக்கு ஏற்றுமதி மேற்கொண்டு அதற்காகதான் மேற்கண்ட ரசீதை வழங்கினேன் என்றாலும் அதற்காக அதில் சொல்லியுள்ள பணம் முழுவதையும் கட்டணமாக பெற்றுக்கொண்டேன் என்றாலும் சரியல்ல. பொருள்களை ஏற்றி

இறக்கியதற்குரிய ஆவணங்களை வேண்டுமென்று சிபிஐ வசம் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. மேற்கண்ட ரசீதில் கண்ட கையொப்பம் எனது கையொப்பம் என்றால் சரியல்ல. சில நேரம் பொருளை ஏற்றுமதி செய்யும் நபர்களே ரசீதை பூர்த்தி செய்வது உண்டு. ஏற்றுமதி செய்த விபரம் உண்மையானது என்றாலும் நான் சிபிஐ கேட்டுக்கொண்டதன் பேரில் மறுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ரசீதில் தடை செய்யப்பட்ட பொருட்கள் ஏற்றுமதி செய்வதற்கு தவறாக பயன்படுத்தலாம் என கருதி நானே தான் பூர்த்தி செய்து படிவத்தை வழங்குவேன் என்றாலும் மேற்கண்ட ரசீதையும் நானே பூர்த்தி செய்தேன் என்றால் மறுக்கிறேன்.

**(மற்ற எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.)**

Taken down before me in the open court read over to the witness and acknowledged by him/her to be correct.

VADIVELU T P — Digitally signed by VADIVELU T P

01.08.2025 — XI Additional Special Judge for CBI Cases.